# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No.12 of 2024

Deposition of PW.2

Name of the Witness: திரு.சுகுமாரன்

Date : 11.03.2026

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்)

10) பிரதிவாதி என்னுடைய அப்பாவின் தங்கை மகன். பி.கே.பி. கிரேண்ட் ஹோட்டல் தருமபுரி பழைய பேருந்து நிலையத்திற்கு ராஜகோபால் பூங்காவிற்கு எதிரில் உள்ளது. அதில் பிரதிவாதி பங்குதாரர். அந்த ஹோட்டல் பலகோடி மதிப்புகள் போகும், எவ்வளவு மதிப்பு போகும் என்று குறிப்பிட்டு எனக்கு தெரியாது. பி.கே.பி.ஸ்பின்னிங் மில் குண்டலப்பட்டியில் உள்ளது. அந்த மில்லும் பலகோடி மதிப்புகள் போகும். அதன் மீது அவர் லோனே 90 கோடிக்கு வாங்கி உள்ளார். அதனால் அது நிறைய மதிப்பு போகும். பி.கே.பி.ஸ்பின்னிங் மில் ஒட்டியே 14 ஏக்கரில் பிரதிவாதி பள்ளி கட்டியுள்ள விவரம் எனக்கு தெரியும், டிரஸ்ட் மூலமாக கட்டி உள்ளார்.

11) பிரதிவாதி பிரைவேட் லிமிடெட் கம்பெனிக்கு பி.கே.பி என்ற பெயரில் உள்ள அனைத்து நிறுவனங்களுக்குமே பிரதிவாதிதான் உரிமையாளர் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 2ம் அயிட்ட சொத்து 30-40 லட்சத்திற்கு போகும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4வது பத்தியில் 4வது வரியில் 2ம் அயிட்ட சொத்து 15.09.2009 தேதியிட்ட கிரய பத்திரப்படி பாத்தியப்பட்ட பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்று சொல்லி இருப்பது சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1ம் அயிட்ட சொத்து சுமார் 30-40 லட்சத்திற்கு போகும். தாவா சொத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 3ம் அயிட்ட சொத்து சுமார் 1 1/2-2 ஏக்கர் நிலம் சுமார் 30-40 லட்சத்திற்கு போகும்.

12) பிரதிவாதிக்கு தருமபுரியில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அதனால் பிரதிவாதிக்கு வட்டிக்கு கடன் வாங்க வேண்டிய அவசியம்

இல்லை என்றால் சரியல்ல, வட்டிக்குத்தான் வாங்கி உள்ளார். அனைத்து சொத்துக்களும் வங்கி மூலமாக லோன் போட்டுதான் வாங்கி உள்ளார். என் அப்பா உயிருடன் இருக்கும்போது பிரதிவாதி என் அப்பாவிடம் வட்டிக்காக பணம் எதுவும் கடனாக வாங்கவில்லை என்றால் சரியல்ல. 8144555568 என்ற மொபைல் எண் என்னுடையதுதான். இதில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். பி.கே.பி பீடு மில்ஸ் பிரைவேட் லிமிடெட் மின் உபகரணங்கள் வாங்குவதற்காக கொடேஷன் கேட்டார்கள், அப்போது என்னிடம் காசோலை கொடுப்பதாக சொல்லி கையெழுத்து வாங்கினார்கள், எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது, அதற்குண்டான பரிவர்த்தனை எதுவும் நடக்கவில்லை, தேதி மற்றும் தொகையை நான் எழுதவில்லை, கையெழுத்து மட்டும் வாங்கி கொண்டார்கள். 25.11.2022 தேதியிட்ட பேமேண்ட வவ்சரில் உள்ள கையெழுத்து **பி.சா.ஆ.1**. நான் ரூ.3,00,000/- பணத்தை பெற்று கொண்டதாக பேமண்ட் வவ்சர் எழுதி கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13) பிரதிவாதி தருமபுரியில் மிகப்பெரிய தொழிலதிபர் என்றும் அவரிடம் பணம் பெறுவதற்காக அங்குசம் பத்திரிக்கையில் தவறான விவரங்கள் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பெயரை கலங்கப்படுத்துவதற்கு இது போல பத்திரிக்கையில் பொய்யான தகவலை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த பிறகு பிரதிவாதி எனக்கும் என் தாயாருக்கும் என் சகோதரர்களுக்கும் நிறைய உதவிகள் செய்துள்ளார் என்றாலும் அவரிடம் இருந்து பணம் பெற வேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14) என் அப்பாவின் ஈம சடங்கிற்கு பிரதிவாதி என்னிடம் ரூ.50,000/- பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ.2,00,000/-க்கு மேல் செலவு செய்து என் அப்பாவிற்கு சமாதி கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. என் தந்தை உயிருடன் இருக்கும்போது பணத்தை பெற்று கொண்டுள்ளதால் உயில்படி அந்த இழப்பீட்டு தொகை என் அம்மாவிற்கு பாத்தியம் என்று நாங்கள் இந்த வழக்கு போட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. என் அப்பா வாழ்நாளிலே அந்த பணத்தை பெற்று கொண்டார் என்றால் சரிதான். என் அப்பாவின் வங்கி கணக்கில் என் அம்மாதான் வாரிசுதாரர். என் அப்பாவின் வங்கி கணக்கிற்கு என் அம்மா மட்டும் வாரிசு இல்லை, அப்பாவின் பிள்ளைகள் மனோகரன், நான், என் சகோதரி கலைவாணி அனைவரும் வாரிசுகள் என்றால் என் அப்பா என் அம்மாவை மட்டும்தான் வாரிசுதாரராக நியமித்துள்ளார். என் அப்பா என் அம்மாவை வாரிசுதாரராக நியமிக்கவில்லை

என்றாலும் வங்கி கணக்கு பணத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு என் அம்மாவின் பொது முகவர் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சட்டப்படி செல்லதக்கதல்ல என்றாலும் இந்த வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

15) வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரம் வழக்கிற்காக மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரத்திற்கான முத்திரை தாள்கள் யார் பெயரில் வாங்கப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. என் அப்பா தியாகி என்பதால் அவருடைய குடும்ப ஓய்வு பணத்தில் என் அம்மாவிற்கு மட்டுமே உரிமை உள்ளது, என் அம்மாவிற்கு என் அப்பாவின் ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்றால் என் அப்பாவின் மற்ற வாரிசுகளுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் வா.சா.ஆ.2 நாங்கள் என் அப்பாவின் பிள்ளைகளாக வாரிசுகள் ஆட்சேபணை செய்யவில்லை என்பதால்தான் என் அம்மாவிற்கு ஓய்வூதியம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் யாரும் ஆட்சேபணை செய்திருந்தால் என் அம்மாவிற்கு ஓய்வூதிய பணம் கிடைத்திருக்காது என்றால் எனக்கு தெரியாது.

16) வா.சா.ஆ.3 என் அப்பா வடிவேல் அவருடைய சகோதரர்களுக்கும் தாங்கள் வாங்கிய சொத்துக்களை மற்றொருவர் பெயரில் பாகம் ஒதுக்கப்பட்டு பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் பிதுராஜித சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எந்த வங்கியில் இருந்து எந்த வங்கிக்கு பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டது என்றால் என் அப்பா, அம்மாவின் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் இருந்து பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டது, பிரதிவாதியின் வங்கி பெயர் எனக்கு தெரியாது.

17) வா.சா.ஆ.12 என் அம்மா சொல்ல சொல்ல நான் புகார் தயார் செய்து முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது. அதில் என்னுடைய மொபைல் எண் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.13 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள முகவரிகள் என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி என் அண்ணன் மனோகரனுக்கு செலவு செய்கிறார் என்றும் எனக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என் விரோதம் கொண்டு என் தாயாரை தூண்டிவிட்டு பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் கொடுப்பதற்கு முன்பு நானோ என் தாயாரோ பிரதிவாதியை தொடர்பு

கொண்டு கேட்டுள்ளோமா என்றால் பலமுறை தொடர்பு கொண்டு பணம் கேட்டுள்ளோம், தேதி ஞாபகமில்லை.

18) 2023ம் வருடம் 6ம் மாதம் வன்னியர் கல்யாண மண்டபம் அருகே உள்ள தெற்கு இரயில்வே லைன் ரோட்டில் வடக்கு பார்த்த பிரதிவாதி வீட்டிற்கு மாலை 05.00 மணிக்கு நான் மட்டும் சென்று பணம் கேட்டேன். என் அம்மா என்னுடன் வரவில்லை. என் தாயார் பிரதிவாதியிடம் வீட்டிற்கு நேரடியாக சென்று பணம் கேட்டிருக்கிறார்கள், 2023 வரை பணம் கேட்டிருக்கிறார், தேதி, மாதம் ஞாபகமில்லை. என் தாயார் பணம் கேட்டதற்கு அவரை அசிங்கமாக திட்டி மிரட்டினார்கள். பிரதிவாதி வீட்டில் சிசிடிவி கேமிரா உள்ளதா என்று எனக்கு தெரியாது. என் தாயாரை கண்டாரோலி, தேவிடியா உனக்கு வேண்டுமா சொத்து என்று திட்டினார். உன் மகனை கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். என் அம்மாவை திட்டும்போது நான் உடன் இல்லை, அதனால் எனக்கு அது பற்றி நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.12 புகாரில் தனக்கு கர்நாடகா முதல்வர், போலீஸ் அதிகாரிகள், வழக்கறிஞர்கள் கபில் சிபில் தெரியும் என்று குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி முதலில் தெரியாது என்று சொல்லிவிட்டு பிறகு தன் அம்மா என்னிடம் சொன்னதாக சொன்னார். இந்த விவரங்கள் தவறானது என்றாலும் வழக்கிற்காக மோசடியாக புகாரை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

19) நான் அங்குசம் பத்திரிக்கையில் பத்திரிக்கையாளர் இல்லை. எனக்கு வா.சா.ஆ.18 10.08.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி எனக்கும் என் அம்மாவிற்கும் அனுப்பி உள்ளார் என்றால் எனக்கு எதுவும் வரவில்லை. அந்த சட்ட அறிவிப்பு என் அம்மாவிற்கு வந்தது. அந்த சட்ட அறிவிப்பிற்கு பதில் எதுவும் கொடுக்கவில்லை.

20) என் தாயாருக்கு பிரதிவாதி எந்த பணமும் கொடுக்க வேண்டியதில்லை என்றும் இவ்வழக்கு போடுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** - இல்லை

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.